ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ வாட மருதிடை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வாட மருதிடை ॥

திருச்சித்திரகூடம் - 2

‡வாட மருதிடை போகி⋆ மல்லரைக் கொன்றொக்கலித்திட்டு⋆
ஆடல் நல் மாவுடைத்து⋆ ஆயர் ஆநிரைக்கன்றிடர் தீர்ப்பான்⋆
கூடிய மா மழை காத்த⋆ கூத்தன் என வருகின்றான்⋆
சேடுயர் பூம் பொழில் தில்லைச்⋆ சித்திரகூடத்துள்ளானே (1)

பேய் மகள் கொங்கை நஞ்சுண்ட⋆ பிள்ளை பரிசிதுவென்றால்⋆
மா நில மா மகள்⋆ மாதர் கேள்வன் இவன் என்றும்⋆ வண்டுண்
பூ மகள் நாயகன் என்றும்⋆ புலன் கெழு கோவியர் பாடித்⋆
தே மலர் தூவ வருவான்⋆ சித்திரகூடத்துள்ளானே (2)

பண்டிவன் வெண்ணெய் உண்டான் என்று⋆ ஆய்ச்சியர் கூடி இழிப்ப⋆
எண் திசையோரும் வணங்க⋆ இணை மருதூடு நடந்திட்டு⋆
அண்டரும் வானத்தவரும்⋆ ஆயிரநாமங்களோடு⋆
திண்திறல் பாட வருவான்⋆ சித்திரகூடத்துள்ளானே (3)

வளைக் கை நெடுங்கண் மடவார்⋆ ஆய்ச்சியர் அஞ்சி அழைப்ப⋆
தளைத்தவிழ் தாமரைப் பொய்கைத்⋆ தண் தடம்புக்கண்டர் காண⋆
முளைத்த எயிற்றழல் நாகத்து⋆ உச்சியில் நின்று அதுவாட⋆
திளைத்தமர் செய்து வருவான்⋆ சித்திரகூடத்துள்ளானே (4)

பருவக் கரு முகிலொத்து⋆ முத்துடை மா கடல் ஒத்து⋆
அருவித் திரள் திகழ்கின்ற⋆ ஆயிரம் பொன் மலை ஒத்து⋆
உருவக் கருங்குழல் ஆய்ச்சி திறத்து⋆ இன மால் விடை செற்று⋆
தெருவில் திளைத்து வருவான்⋆ சித்திரகூடத்துள்ளானே (5)

எய்யச் சிதைந்ததிலங்கை மலங்க⋆ வரு மழை காப்பான்⋆
உய்யப் பரு வரை தாங்கி⋆ ஆ நிரை காத்தான் என்றுஏத்தி⋆
வையத்தெவரும் வணங்க⋆ அணங்கெழு மா மலை போலே⋆
தெய்வப் புள் ஏறி வருவான்⋆ சித்திரகூடத்துள்ளானே (6)

ஆவர் இவை செய்தறிவார்⋆ அஞ்சன மா மலை போலே⋆
மேவு சினத்தடல் வேழம்⋆ வீழ முனிந்து⋆ அழகாய
காவி மலர் நெடுங்கண்ணார்⋆ கை தொழ வீதி வருவான்⋆
தேவர் வணங்கு தண் தில்லைச்⋆ சித்திரகூடத்துள்ளானே (7)

பொங்கி அமரில் ஒருகால்⋆ பொன்பெயரோனை வெருவ⋆
அங்கவன் ஆகம் அளைந்திட்டு⋆ ஆயிரம் தோள் எழுந்தாட⋆
பைங்கண் இரண்டெரி கான்ற⋆ நீண்ட எயிற்றொடு பேழ் வாய்ச்⋆
சிங்க உருவின் வருவான்⋆ சித்திரகூடத்துள்ளானே (8)

கரு முகில் போல்வதோர் மேனி⋆ கையன ஆழியும் சங்கும்⋆
பெருவிறல் வானவர் சூழ⋆ ஏழ் உலகும் தொழுதேத்த⋆
ஒரு மகள் ஆயர் மடந்தை⋆ ஒருத்தி நிலமகள்⋆ மற்றைத்
திரு மகளோடும் வருவான்⋆ சித்திரகூடத்துள்ளானே (9)

‡தேன் அமர் பூம் பொழில் தில்லைச்⋆ சித்திரகூடம் அமர்ந்த⋆
வானவர் தங்கள் பிரானை⋆ மங்கையர் கோன் மருவார் தம்⋆
ஊன் அமர் வேல் கலிகன்றி⋆ ஒண் தமிழ் ஒன்பதோடொன்றும்⋆
தான் இவை கற்று வல்லார்மேல்⋆ சாரா தீவினை தாமே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥